# அகதிகள் வாரம்: கொண்டாடவும், சிந்திக்கவைப்பதற்குமான காலம்.

*Andrew Goledzinowski,*இடமிருந்து ஒரு செய்தி
ஆட்கடத்தல் பிரச்சினைகள் மற்றும் சட்டவிரோத மனித வியாபாரத்திற்கான அவுஸ்திரேலிய தூதர்
*(Australian Ambassador for People Smuggling Issues and Human Trafficking)*

அகதிகள் வாரத்தையும், அகதிகளாக இங்கே வந்தவர்கள் அவுஸ்திரேலிய சமுதாயத்திற்கு ஆற்றிய பங்களிப்புகளைக் கொண்டாடுவதற்காகவும், அவுஸ்திரேலியர்கள் வாழ்வின் எல்லாத் துறைகளிலிருந்தும் வந்து 2017 ம் ஆண்டு ஜூன் மாதம் கலந்து கொண்டனர். அவுஸ்திரேலியா, அகதிகளை வரவேற்று வெற்றிகரமாக மீள்குடியேற்றும் பெருமைமிக்க நீண்ட பாரம்பரியத்தைக் கொண்ட நாடாகும்.

இரண்டாம் உலக மகாயுத்தத்தைத் தொடர்ந்து உலகம் முழுவதிலுமிருந்து 865,000 க்கும் கூடுதலான அகதிகளை அவுஸ்திரேலியா மீள்குடியேற்றம் செய்துள்ளது. அகதிகளுக்கு நிரந்தர மீள்குடியேற்ற இடங்களை வழங்கும் உலகின் முதல்தர மூன்று நாடுகளில் அவுஸ்திரேலியாவானது அமெரிக்க ஐக்கிய நாடுகள் மற்றும் கனடா போன்றவற்றுக்கு ஒப்பான தரத்தைக் கொண்டுள்ளது.

அகதிகள் மீள்குடியேற்றம் குறித்த அவுஸ்திரேலிய கடந்தகால நிகழ்வுகளைக் கொண்டாடுகையில், எமது தாராள மனிதாபிமான திட்டங்களை ஆதரிப்பதில் பலமான எல்லைப்பாதுகாப்பு வகிக்கும் பங்கினை அங்கீகரிப்பது முக்கியமானதாகும். ஆபத்துக்களைத் தணிக்கும் வழியில் குடியேற்றத்தை அரசாங்கம் நிர்வகிக்க முடியுமென எல்லைப்பாதுகாப்பு பொதுமக்களுக்கு நம்பிக்கையூட்டுகிறது. அத்துடன் மனிதாபிமான உதவி மிகவும் தேவைப்படுவோர்மீது கவனம்செலுத்துகிறது.

இந்த நம்பிக்கை இல்லாமல், 2018-19 நிதி ஆண்டில் 18,750 இடங்களாக அதிகரிக்க, அவுஸ்திரேலியாவின் வருடாவருட மனிதாபிமான திட்டத்தினை அவுஸ்திரேலிய அரசாங்கத்தால் கடைப்பிடிக்க முடியாமல்போயிருக்கும்.

வருடாவருடம் உள்வாங்கப்படுவோரைவிட, மேலதிக 12,000 சிரியன் மற்றும் ஈராகி அகதிகளளை வரவேற்பதற்கு எமது எல்லைக்கட்டுப்பாடு அரசாங்கத்திற்குப் பக்கபலமாக இருந்தது.

ஆட்கடத்தும் படகு அவுஸ்திரேலியாவை வந்தடைந்து இற்றைக்கு மூன்று ஆண்டுகளுக்கும் மேலாகிவிட்டது. அத்துடன் மிகமுக்கியமாக, ஆட்கடத்தல் காரணமாக கடலில் எவராவயினும் மூழ்கியதும் மூன்று ஆண்டுகளுக்கு முன்னராகும்.

அவுஸ்திரேலியாவின் கடுமையான கரையோரப்பாதுகாப்பு கொள்கைகளின்  நேரடி விளைவின் பதிவு இதுவாகும்.

துரதிஷ்டவசமாக, அவுஸ்திரேலியாவில் குடியேறுவதற்கான பொய்வாக்குறுதிகளால் பாதிக்கப்படக்கூடிய மக்களிடமிருந்து ஏராளமான பணத்தைப் பிடுங்குவதற்கு ஆட்கடத்துவோர்  தொடர்ந்தும் முயற்சிப்பார்களென்பதை நாம் அறிவோம். உண்மையில், படகுவழியாக சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவை வந்துசேர முயற்சிக்கும் எந்தநபரும்  வழிமறிக்கப்பட்டுத் திருப்பி அனுப்பப்படுவார் அல்லது அவர்களது சொந்தநாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படுவார்.  அவுஸ்திரேலியாவுக்கான சட்டவிரோத கடல்வழிப் பாதை மூடப்பட்டுள்ளது, அத்துடன் தொடர்ந்தும் அது மூடப்பட்டே இருக்கும்.

ஒவ்வொரு வருடமும் தகுதிவாய்ந்த பல்லாயிரக்கணக்கான அகதிகளுக்கு மீள்குடியேற்றத்தையும், புது வாழ்வையும் அவுஸ்திரேலியா வழங்குவதற்கு வேண்டிய நிபந்தனைகளை உருவாக்கும் அதேவேளை ஆட்கடத்தலை நிறுத்துவதுடன், அவுஸ்திரேலிய அரசாங்க எல்லைப்பாதுகாப்பு கொள்கைகள் உயிர்களைப் பாதுகாக்கின்றன.

மேலதிக தகவலுக்காக வருகைதரவும் www.osb.border.gov.au